பக்கங்கள்: 08

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 08 வள்ளுவர் ஆண்டு 2055 புரட்டாதி 20 ஞாயிற்றுக்கிழமை 06.10.2024 கதிர் 333

### இது ரகசியம் அல்ல!

தமிழ் அரசுக் கட்சியின் தேர்தல் நியமனக் குழுக் கூட்டம் நான் நேற்று இந்தப் பத்தியில் எதிர்வுகூறியிருந்ததைப் போன்றே நடந்து முடிந்திருக்கிறது. ☞2

## தமிழ் அரசு கட்சியின்
# வேட்பாளர் பட்டியல் இறுதியாகவில்லை
### சிறீதரன், சுமந்திரன் போட்டியிடுவது உறுதி

தமிழ் அரசுக் கட்சியின் சார்பில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான சிறீதரன், சுமந்திரன் இருவரும் யாழ். மாவட்டத்தில் போட்டியிடுவது என்று தீர்மானிக்கப்பட்டது தவிர கட்சியின் வேட்பாளர் பட்டியல் நேற்று இறுதிசெய்யப்படவில்லை. தேர்தல் நியமனக் குழு இது தொடர்பில் இன்றும் கூடிப் பேசவுள்ளது.

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தேர்தல் நியமனக் குழு நேற்று வவுனியாவில் உள்ள தனியார் விடுதியில் காலை பத்து மணிக்கு ஆரம்பமாகி பிற்பகல்வரை நடைபெற்றிருந்தது. மாவை சேனாதிராசா தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் நாடாளுமன்றத் தேர்தலுக்கான வேட்பாளர் பட்டியல், திருகோணமலை, அம்பாறை மாவட்டங்களில் எவ்வாறு போட்டியிடுவது என்பது தொடர்பில் ஆரயப்பட்டது.

அந்தவகையில், கட்சியின் நியமனக்குழுக் கூட்டம் சம்பந்தமாக அக்கட்சியின் ☞2

## முன்னணியின் வேட்பாளர்கள் கையொப்பம்

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி சார்பாக யாழ். - கிளிநொச்சி தேர்தல் மாவட்டத்தில் போட்டியிடும் வேட்பாளர்கள் வேட்புமனுவில் ☞7

## மூவருக்குத் தடை

நாடாளுமன்றத் தேர்தலில் மூவருக்கு வேட்புமனுக்களைவழங்குவதில்லைஎன ஐக்கிய மக்கள் சக்தி தீர்மானித்துள்ளது.

இந்தவருடநாடாளுமன்றத்தேர்தலில் கம்பஹா மாவட்டத்தைச் சேர்ந்த ஒரு நாடாளுமன்றஉறுப்பினர்உட்படமூன்று நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு வேட்புமனுக்களைவழங்குவதில்லைஎன ஐக்கிய மக்கள் சக்தி தீர்மானித்துள்ளது.

கட்சியின் சிரேஷ்ட பேச்சாளர் ஒருவர் தெரிவிக்கையில், ஜனாதிபதி தேர்தல் காலத்தில் கட்சிக்கு எதிராகச் செயற்பட்டமை காரணமாகவே இந்த நியமனங்களை வழங்குவதில்லை என தீர்மானித்துள்ளது. இவ்விடயம்தொடர்பில் கட்சியின் உயர் மட்டத்தில் ஏற்கனவே கலந்துரையாடப்பட்டுள்ளது என்றார்.

# நிச்சயமற்ற தன்மை நீடித்து வருவதால் மறுசீரமைப்பை தொடர்வது அவசியம்
### சர்வதேச நாணய நிதியம் வலியுறுத்து

நாட்டின் பொருளாதார நிலவரத்தில் முன்னேற்றங்கள் அடையப்பட்டிருப்பினும் நலிவுற்ற நிலையும், நிச்சயமற்ற தன்மைகளும் நிலவுவதனால், மறுசீரமைப்பு நடவடிக்கைகளைத் தொடர்ந்து முன்னெடுக்குவேண்டியது மிகவும் அவசியம் என சர்வதேச நாணய நிதியத்தின் தொடர்பாடல் பிரிவின் பணிப்பாளர் ஜூலி கொஸாக் வலியுறுத்தியுள்ளார்.

வொஷிங்டனில் கடந்த வார இறுதியில் நடைபெற்ற சர்வதேச நாணய நிதியத்தின் மாதாந்த செய்தியாளர் சந்திப்பின்போது இலங்கை தொடர்பில் ஊடகவியலாளர்களால் எழுப்பப்பட்ட கேள்விகளுக்குப் ☞7

## விரிவுரையாளர்களில் அரைவாசிப் பேர் இல்லை

நாட்டிலுள்ள பல அரச பல்கலைக் கழகங்களில் விரிவுரையாளர்கள் பற்றாக்குறை நிலவுவதாகத் தெரிவிக் கப்படுகிறது.

பல்கலைக்கழக அமைப்பில் 12,992 விரிவுரையாளர்கள் காணப்பட வேண்டிய நிலையில், இன்று வரை 6,548 விரிவுரையாளர்கள் மாத்திரமே பணியில் ஈடுப்பட்டிருக்கின்றனர் என்று பல்கலைக்கழக மாணவர் அமைப்பு தெரிவித்துள்ளது.

அதன்படி, அரசபல்கலைக்கழகங்களில் 6,444 விரிவுரையாளர்கள் பற்றாக்குறையாகக் காணப்படுகின்றனர் என்றுகூறப்படுகின்றது. இந்நிலையில், சில பல்கலைக்கழக பாடநெறிகளை நிறுத்த வேண்டிய நிலையும் ஏற்பட்டுள்ளதாக பல்கலைக்கழக மாணவர் அமைப்பு தெரிவித்துள்ளது.

அத்துடன், தற்போதுள்ள பிரச்சினைக்குதீர்வுகாணாமல் அதிக தேவை உள்ள பாடங்களுக்கு மாணவர் சேர்க்கையைமட்டுப்படுத்தசில அதிகாரிகள்முன்மொழிவதாக பல்கலைக்கழக மாணவர் அமைப்பு மேலும் தெரிவித்துள்ளது.

## சிலிண்டரில் போட்டியிட சுதந்திரக் கட்சியும் முடிவு

எதிர்வரும் பொதுத் தேர்தலில் எரிவாயு சிலிண்டர் சின்னத்தில் போட்டியிடுவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பதில் தவிசாளரும் முன்னாள் அமைச்சருமான நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

கட்சியின் அரசியல் குழு மற்றும் மத்தியச் செயற்குழு என்பன கூடி இந்த ☞7

## பொருளாதார மறுசீரமைப்பை தொடர்வதில் அரசு திட்டவட்டம்
### மகிழ்ச்சியடைவதாக நாணய நிதியம் அறிவிப்பு

மறுசீரமைப்புநடவடிக்கைகளைத் தொடர்ந்து முன்னெடுத்துச்செல்வதில் ஆளும்தரப்பு அர்ப்பணிப்புடன் இருப்பதனையிட்டுதாம் மகிழ்ச்சியடைவதாக சர்வதேச நாணய நிதியத்தின் ஆசிய, பசுபிக் திணைக்களத்தின் பணிப்பாளர் கிருஷ்ணா ஸ்ரீனிவாசன் தெரிவித்தார்.

பொருளாதார நெருக்கடியிலிருந்து நாட்டை மீட்சிப் பாதையில் கொண்டு செல்வதற்கு உதவிய, மிகக் கடினமான முயற்சிகளின் ஊடாக ☞7

## சுரேஷ் சாலே பதவி விலகல்

அரசபுலனாய்வுப்பணிப்பாளராக கடமையாற்றியஇலங்கைஇராணுவ பிரிகேடியர் சுரேஷ் சாலே தனது பதவியைஇராஜினாமாசெய்துள்ளார்.

அவர் நேற்று முதல் ஓய்வு பெற்றுள்ளதாக தெரிவித்துள்ள நிலையில், அந்த பதவிக்கு பிரதி பொலிஸ் மா அதிபர் தம்மிக்க பிரியந்த நியமிக்கப்பட்டுள்ளார்.

குறித்த நியமனத்தை நிரந்தரமாக்கபொலிஸ்ஆணைக்குழுவின் பரிந்துரைகள் அனுப்பி வைக்கப் பட்டுள்ளன. பிரதி பொலிஸ் மா அதிபர் தம்மிக்க பிரியந்த எதிர்வரும் திங்கட்கிழமைபதவியேற்பார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

உயிர்த்த ஞாயிறு தின குண்டு வெடிப்புக்களுடன்இணைத்து ☞7

## நாளை வரை ஜனநாயக கூட்டணி தமிழ் அரசுக்குக் கால அவகாசமாம்

இலங்கைத்தமிழ்அரசுக்கட்சியின் தேசியப்பட்டியல்ஆசனஆசையினால் திருகோணமலைமற்றும்அம்பாறையில் தமிழ் பிரதிநிதித்துவ இழப்பினை சந்திக்கும் ஆபத்து ஏற்பட்டுள்ளதாக ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணி தெரிவித்துள்ளது.

எவ்வாறாயினும், தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை.சோ. சேனாதிராஜா தலைமையிலான குழுவினர் இணங்கியதன் பிரகாரம் இணைந்து செயற்படுவதற்கு நாளை திங்கட்கிழமைவரையில்காலஅவகாசம் வழங்குவதாகவும் குறிப்பிட்டுள்ளது.

நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் ஆசன ஒதுக்கீடு உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் ஆராய்வதற்கான ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியின் முக்கிய கூட்டமொன்று நேற்று வவுனியாவில் உள்ள தனியார் விடுதியில் காலை பத்து மணிமுதல் மாலை 5.30மணி வரையில் நடைபெற்றிருந்தது.

ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியின் ஆசனப் பங்கீடுகள் யாழ்ப்பாணம், வன்னி, மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களை மையப்படுத்தி பூர்த்தியாகியுள்ளது. எனினும்அம்பாறை, திருகோணமலை ஆகிய மாவட்டங்கள் சம்பந்தமான பங்கீடு திங்கட்கிழமை இரவு இறுதியாகவுள்ளது.

இந்நிலையில் குறித்த கூட்டத்தின் பின்னர்ஊடங்களுக்குஅக்கூட்டணியின் ஊடகப்பேச்சாளரும், ஈ.பி.ஆர்.எல்.எப். கட்சித்தலைவருமான சுரேஷ் ☞7

## பெரும்பான்மை மக்களுக்குள் கரைந்து போய்விடாதீர்கள்
### போராளிகள் குடும்பநலக் காப்பகம் கோரிக்கை




மாதம் 14ஆம் திகதி நடைபெற உள்ள பாராளுமன்றப் பொதுத் தேர்தலில் தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்திப் போட்டியிடும் அரசியல் கட்சிகள் மற்றும் வேட்பாளர்கள் என சகல தரப்புகளும், மக்களின் நலன் கருதி நீண்ட காலமாகவே எமது மக்கள் வேண்டி நிற்கும் அரசியல் அபிலாசைகளை ☞7

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

வேட்பாளர்பட்டியல்இறுதிசெய்யப்படவில்லை. வேட்பாளர்களைத் தெரிவு செய்வதற்கான நிபந்தனைகள் பற்றியே அதிகம் பேசப்பட்டுள்ளது. ஜனாதிபதித் தேர்தலில் கட்சிக்கு எதிராகச் செயற்பட்டவர்களுக்கு தேர்தலில் இடமளிக்கக்கூடாது என்கிற தனது நிலைப்பாட்டை சுமந்திரன் ஆணித்தரமாக எடுத்துரைத்தார். அனந்திசசிதரன், மன்னாரைச் சேர்ந்த சிவகரன் ஆகியோர் மீதான ஒழுக்காற்று நடவடிக்கையை மட்டுமல்லாது விக்னேஸ்வரனைக் கட்சியைவிட்டு நீக்க வேண்டும் என்று தான் எடுத்த முன்னகர்வுகளையும் உதாரணமாகக் காட்டி அதன்படி இப்போது கட்சிக்கு விரோதமாகச் செயற்பட்டவர்களுக்குஎதிராகவும்நடவடிக்கை அவசியம். அதனால் அவர்களுக்கு இந்தத் தேர்தலில்போட்டியிட இடமளிக்கப்படக்கூடாது என்று தெரிவித்தார். அந்த நிலைப்பாட்டில் தான் உறுதியாக இருப்பார் என்றும் அதையும் மீறி கட்சி அவருக்கு வேட்பாளராவதற்கான வாய்ப்பை வழங்கினால் பகிரங்கமாகவே தான் இதனை வெளியே சொல்வார் என்றும் தெரிவித்தார்.

தேர்தல் நியமனக் குழுவில் இருந்தவர்கள் எல்லோரும் சிறீதரன் செய்தது தவறு என்று ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். அவர் செய்தது தவறுதான் என்பதைத் தமது வாயால் ஒத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனாலும் வெறும் வாக்குஎன்கிறமலினஅரசியலுக்காகஅவருக்கு வேட்பாளர் வாய்ப்புக் கொடுப்பதை அவர்களில் எவரும் எதிர்க்கவில்லை. கட்சிக்கு சிறிதரன் செய்த துரோகம் குறித்து ஒவ்வொருவரும் பேசப் பேச அது மாவையருக்கும் உள்ளூரச் சுட்டதால், அடிக்கடி அவரே பதில் பேச முற்பட்டுள்ளார். கொள்கை, கோட்பாடு, கட்சி விசுவாசம், ஒற்றுமை, இனப் பற்று என்பன பற்றியெல்லாம் வகுப்பெடுத்துள்ளார்.

தமிழ்பொதுக்கட்டமைப்பின்வேட்பாளரை ஆதரிப்பதுஎன்பதைத்தான்ஆரம்பத்திலிருந்தே கூறிவந்தேன் என்றும் அதையே தான் தொடர்ந்து செய்து வந்தார் என்றும் பொதுக் கட்டமைப்பினரின் மேடையில் ஏறித் தான் அவர்களுக்கு ஆதரவுதிரட்டவில்லை என்றும் சிறீதரன் தனது நிலையை நியாயப்படுத்த முயன்றார். இதன் மூலம் கிளிநொச்சியில் அவர் ஏற்பாடு செய்துகொடுத்த கூட்டத்தில் ஏறி அங்கிருந்த மக்களைப் பார்த்து ''இனத்துக்காக உங்களைப் போல நானும் அரியநேத்திரனுக்குத்தான் வாக்குப் போடப் போகின்றேன்'' என்ற மாவையரை குற்றவாளியாக்கிவிட்டார் சிறீதரன்.

இடையில் சாராயக்கடை அனுமதி தொடர்பானவிவகாரமும்பேசப்பட்டிருக்கின்றது. ஆளும் தரப்பினர் எப்படியும் சாராயக் கடை அனுமதிக்கும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் இடையிலான தொடர்பு விடயத்தை வெளியிடுவார்கள், அப்படி வெளியிடும்போதுஅதில்தமிழ்அரசுக்கட்சியின் வேட்பாளர் பெயரும் இடம்பெற்றால் அது கட்சிக்குப் பெரும் பின்னடைவாக இருக்கும் என்று சுமந்திரன் சுட்டிக்காட்டினார். தான் சாராயக் கடை அனுமதிக்காக யாருக்கும் பரிந்துரைக்கவில்லை என்று சிறீதரன் கூட்டத்தில் மறுத்தார். அரசின் பட்டியல் வெளிவரும்போது உண்மை தெரிந்துவிடும்.

கடைசியில் இந்த சிறீதரன், சுமந்திரன் இருவருமே கட்சிக்கு அவசியம், இருவரும் தேர்தலைக் கேட்கவேண்டும் என்று கட்சியின் சிரேஷ்ட தலைவர் சிவஞானம் வலியுறுத்த அனைவரும் அதற்குத் தலையசைத்தனர். நேற்றைய கூட்டத்தில் கடைசியில் இந்த இரு வேட்பாளர்களும்தான் இறுதிசெய்யப்பட்டிருந்தனர். மாவட்டங்களில் அடிப்படையில் கிடைத்திருக்கும் விண்ணப்பங்களைப் பரிசீலித்த வரையில் சில மாவட்டங்களில் குறிப்பாக யாழ்ப்பாணம் போன்ற இடங்களில் எதிர்பார்க்கப்பட்ட அளவிற்குச் சிறப்பான வேட்பாளர்கள் கிடைக்கவில்லை என்கிற உணர்வு இருந்தது. அதிலும் குறிப்பாக பெண் பிரதிநிதிகள் விடயத்தில் சிறந்த தெரிவுகள் இருக்கவில்லை என்று கருதப்பட்டது. தேர்தலில்போட்டியிட ஆர்வமுள்ள சமூகத்தில் நன்கறியப்பட்ட, சேவைமனப்பான்மையுள்ள, ஏற்கனவே பொதுச் சேவைகளில் ஈ-டுபாடு கொண்ட பெண்கள் தேர்தலில் போட்டியிட விருப்பதோடு இருப்பின் அவர்கள் தமிழ் அரசுக் கட்சியை நாடலாம். இன்னும் வாய்ப்புக்கள் இருக்கின்றன.

இது தவிர திருகோணமலை மற்றும் அம்பாறை மாவட்டங்களில் தேர்தலில் போட்டியிடுவது குறித்து ஆராயப்பட்டுள்ளது. இந்த இரு இடங்களிலும் தமிழ் அரசுக் கட்சியின் பெயரிலும் வீட்டுச் சின்னத்திலுமே போட்டியிடுவது என்று கட்சி தீர்மானித்துவிட்ட நிலையில் அங்கு ஆசனப் பங்கீடுகளை எப்படி மேற்கொள்வது என்பது தொடர்பில் ஆராயப்பட்டுள்ளது. அதற்காக கூட்டம் முடிந்த கையுடனேயே நியமனக் குழுவைச் சேர்ந்த ஐவர் திருகோணமலைக்குப் புறப்பட்டுச் சென்று அங்கு ஆயருடன் பேசினர். அங்கு அனைத்துக் கட்சிகளும் ஓரணியாகப் போட்டியிடுவதற்கான ஏற்பாடுகளில் தென்கயிலை ஆதீனத்தின் ஆதரவுடன் ஆயர் ஓர் ஏற்பாட்டைச் செய்திருந்தார். எனினும் அங்குள்ள 7 வேட்பாளர்களில் ஐந்து இடங்கள் தமக்கு வேண்டும் என்று மற்றைய கட்சிகள் கேட்கின்றன. ஆனால், அந்த 5 இடங்களும் தமக்கு வேண்டும் மற்றையவர்களுக்கு இரண்டு இடங்களைத்தான் கொடுக்கலாம் என்பதேதமிழ்அரசுக்கட்சியின்நிலைப்பாடாக இருந்தது. அது குறித்துப் பேசி முடிவெடுப்பதே இந்தச் சந்திப்பின் முக்கிய நோக்கமாக இருந்தது. குறைந்தபட்சம் தமிழ் அரசுக் கட்சிக்கு 4 மற்றவர்களுக்கு 3 என்ற அடிப்படையில் நேற்றைய பேச்சுக்களில் இணங்கப்பட்டதாகத் தெரிகிறது.

இன்றுமீண்டும்கூடிவேட்பாளர்பட்டியலை இறுதி செய்வதற்கான முயற்சிகளை தேர்தல் நியமனக் குழு எடுக்கும். ஆனால், இந்தப் பணிகளை முடிக்கு இன்னும் ஓரிரு நாட்கள் செல்லும் என்றே தெரிகிறது.

**இடிமின்னல்**

(idiminnal@gmail.com)

## வேட்பாளர் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஊடகப் பேச்சாளர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்ததாவது:

கட்சியின் மத்திய செயற்குழுவினால் நியமிக்கப்பட்ட 11 பேர் கொண்ட தேர்தல் நியமனக்குழு கூடியிருந்தது. இதன்போது நாடாளுமன்றத் தேர்தலில் வேட்புமனுக்களுக்கான நியமனங்கள் சம்பந்தமாக மாவட்ட ரீதியாக ஆராய்ந்துள்ளோம்.

குறிப்பாக, வேட்பாளர்நியமனங்களுக்கான அடிப்படைகள் சம்பந்தமாகப் பேசப்பட்டு சில தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளன. அத்துடன் மாவட்ட ரீதியாக தெரிவு செய்யப்படுகின்ற வேட்பாளர்கள் எப்பிரதேசங்களை பிரதிநிதித்துவம் செய்பவர்களாக இருக்க வேண்டும் என்பது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டது.

பொதுமக்களிடத்தில் இளையோருக்கு இடமளிக்க வேண்டும், கற்றவர்கள் உள்வாங்கப்படவேண்டும், புதியவர்கள் உள்வாங்கப்படவேண்டும் உள்ளிட்ட பல்வேறு எதிர்பார்ப்புக்கள் பொதுமக்களிடம் காணப்படுகின்றது.

அதனையும் அடிப்படையாக வைத்து பல்வேறுகருத்துக்களைபரிமாற்றியுள்ளோம். இருப்பினும் எமது கட்சி வேட்பாளர் பட்டியல் சம்பந்தமாக இறுதியான தீர்மானம் எதுவும் எடுக்கப்படவில்லை.

அதேநேரம், கடந்த மத்திய செயற்குழுவில் எடுக்கப்பட்ட தீர்மானத்துக்கு அமைவாக, திருகோணமலை மற்றும் அம்பாறை சம்பந்தமாக காணப்படுகின்ற விசேட கரிசனைகள் தொடர்பில் அவதானம் செலுத்தினோம்.

திருகோணமலை மற்றும் அம்பாறையில் தலா ஒவ்வொரு தமிழ் அங்கத்தவர்களே வெற்றிபெறுவதற்கான வாய்ப்புக்கள் காணப்படுகின்றமையால், ஏனையகட்சிகளும் தனித்தனியாக போட்டியிடும்போது அதற்கான வாய்ப்புக்கள் மிகக்குறைவாகும்.

கடந்த தடவை அம்பாறை மாவட்டத்தில் தமிழ்ப் பிரதிநிதித்துவம் இல்லாது போனதைப் போன்று இம்முறையும் அம்பாறை மற்றும் திருகோணமலையிலும் அவ்விதமான நிலைமைகளே காணப்படுகின்றன.

அதனடிப்படையில் அங்கு எவ்விதமாக ஏனைய தமிழ்க் கட்சிகளுடன் இணைந்து போட்டியிட முடியும் என்பது சம்பந்தமாக திருகோணமலை மறைமாவட்ட ஆயருடன் பேச்சுநடத்திதீர்மானங்களைஎடுக்கவுள்ளோம்.

எவ்வாறாக இருந்தாலும் வடக்கு, கிழக்கில் உள்ள ஐந்து தேர்தல் மாவட்டங்களிலும் நாம் தமிழ் அரசுக் கட்சியின் பெயரிலும், வீட்டுச் சின்னத்திலும் தான் போட்டியிடுவதென ஏகோபித்து தீர்மானித்துள்ளோம்.

அதேநேரம், திருகோணமலை, அம்பாறை ஆகிய மாவட்டங்களில் ஏனைய தமிழ் கட்சிகளுடன் உரையாடி அவர்களையும் உள்வாங்கிப் போட்டியிடுவது தொடர்பில் இறுதி முடிவினை எடுக்கவுள்ளோம்.

இதேவேளை, தமிழ் அரசுக் கட்சியில் போட்டியிடுவதற்காக வேட்பாளர்களாக விண்ணப்பித்தவர்கள் பெயர்களை நாளையதினம் (இன்று) இறுதி செய்வதற்கு) எதிர்பார்த்துள்ளோம்.

நாளை கூட வேட்பாளர் பட்டியல் இறுதியாகும்என்றுஎதிர்பார்க்கமுடியாது. எமது கட்சியில் பெண்களை உள்வாங்குவதற்குரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. சமூகத்தில் மக்கள் சேவையாற்றக்கூடிய பெண்களை நீங்களே முன்மொழியுங்கள். நாங்கள் அவர்களை வரவேற்பதற்கு தயாராகவே உள்ளோம்.

தற்போது பெண்களை சமத்துவமாக பேணும் வகையில் விண்ணப்பங்கள் காணப்படவில்;லை. நாங்கள் அவர்களை கட்சிக்குள் உள்வாங்குவதற்காக தற்போது வரையில் கிடைத்த விண்ணப்பங்களுக்கு அமைவாக சில இடங்களில் திருப்திகரமான வேட்பாளர்கள் காணப்படவில்லை. ஆகவே அந்த வெற்றிடங்களையும் நிரப்பிக் கொண்டு இறுதிப் பட்டியலை அறிவிப்போம்.

இதேவேளை, நியமனக்குழுக் கூட்டத்தின்போது நான் சில விடயங்களை ஆணித்தரமாகச் சுட்டிக்காட்டினேன். சிறிதரன் கட்சியின் தீர்மானத்துக்கு எதிராகச் செயற்பட்டமையால் அவர் இந்தத் தேர்தலில் இருந்து ஒதுங்கி இருப்பதுதான் சிறந்தது என்று பரிந்துரைத்தேன். எனினும் சிறிதரன் அதனைஏற்றுக்கொண்டிருக்கவில்லை. ஈற்றில் நியமனக்குழு இருவரையும் யாழ். தேர்தல் மாவட்டத்தில் போட்டியிடுமாறு வலியுறுத்திக் கேட்டுக்கொண்டுள்ளது. அதற்கு அமைவாக இருவரும் தேர்தலில் போட்டியிடுவதென தீர்மானித்துள்ளோம் என்றார்.

## ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில்

# காலநீடிப்பு பிரேரணை புதனன்று நிறைவேறும்

இலங்கை தொடர்பில் ஏற்கனவே நிறைவேற்றப்பட்ட 51/1 தீர்மானத்தை மேலும் ஓராண்டுக்குகாலநீடிப்புசெய்யக்கோரிபிரிட்டன் தலைமையிலான இணையனுசரணை நாடுகளால்தயாரிக்கப்பட்டிருக்கும்பிரேரணை எதிர்வரும் புதன்கிழமை ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் வாக்கெடுப்பின்றி நிறைவேற்றப்படும் என நம்பத்தகுந்த வட்டாரங்கள் மூலம் அறியமுடிகிறது.

ஜெனிவாவில் கடந்த செப்டெம்பர் மாதம் 9 ஆம் திகதி ஆரம்பமான ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 57 ஆவது கூட்டத்தொடர் எதிர்வரும் 11 ஆம் திகதி வெள்ளிக்கிழமையுடன் முடிவுக்கு வருகிறது.

அதன்படி கூட்டத்தொடரின் தொடக்க நாளான கடந்த மாதம் 9 ஆம் திகதி இலங்கையின் மனித உரிமைகள் நிலைவரம் குறித்த ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் வோல்கர் டர்க்கின் எழுத்துமூல அறிக்கை பேரவையில் சமர்ப்பிக்கப்பட்டதுடன், உறுப்புநாடுகளின் பங்கேற்புடன் இலங்கை தொடர்பான விவாதமும் நடைபெற்றது.

இது இவ்வாறிருக்க, 'இலங்கையில் நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகளை மேம்படுத்தல்' எனும் தலைப்பில் மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்ட 46ஃ1 தீர்மானமானது, கடந்த 2022 ஆம் ஆண்டு நடைபெற்ற 51 ஆவது கூட்டத்தொடரின்போது மீண்டும் காலநீடிப்பு செய்யப்பட்டு தற்போது 51ஃ1 தீர்மானம் எனும் பெயரில் நடைமுறைப்படுத்தப்பட்டுவருகிறது.

அத்தீர்மானம் செப்டெம்பர் மாதத்துடன் முடிவுக்குவரும் நிலையில், பிரிட்டன் தலைமையில் அமெரிக்கா, கனடா, மாலாவி, வடமெசிடோனியாமற்றும்மொன்டெனிக்ரோ ஆகிய இணையனுசரணை நாடுகள் ஒன்றிணைந்து 51/1 தீர்மானத்தை மேலும் ஒன்று அல்லது இரண்டு ஆண்டுகளுக்குக் காலநீடிப்பு செய்வது குறித்து ஆராய்ந்தன.

அதற்கமைய 'இலங்கையில் பொறுப்புக்கூறல், நல்லிணக்கம் மற்றும் மனித உரிமைகளை மேம்படுத்தல்' எனும் தலைப்பில் இணையனுசரணை நாடுகளால் தயாரிக்கப்பட்ட முதல் வரைபுக்கு சகல தரப்பினரதும் ஒப்புதல் பெறப்பட்டு, அதனைப் பெரும்பாலும் வாக்கெடுப்பின்றி நிறைவேற்றுவதற்குரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

அந்தவகையில் இப்பிரேரணை எதிர்வரும் புதன்கிழமை ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் சமர்ப்பிக்கப்படும் எனவும், பெரும்பாலும் வாக்கெடுப்பின்றி நிறைவேற்றப்படும்எனவும்இவ்விவகாரத்தில் நெருங்கிப்பணியாற்றிவரும் நம்பத்தகுந்த வட்டாரங்கள் மூலம் அறியமுடிகிறது

# மகா சங்கத்தினருடன் அநுர கலந்துரையாடல்

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க வெள்ளவத்தை, அமரபுர பீடத்திற்கு சென்று இலங்கை அமரபுர பீடத்தின் பதில் மகாநாயக்க தேரர் வண. கரகொட உயன்கொட மைத்திரிமூர்த்தி தேரரை நேற்று சந்தித்து ஆசி பெற்றுக்கொண்டார்.

அமரபுரபீடத்தின்செயலாளரும்இதன்போது கலந்துகொண்டிருந்ததோடு, அவர்களால் செத்பிரித் பாராயணம் செய்யப்பட்டு ஜனாதிபதிக்கு ஆசி வழங்கப்பட்டது.

அதனையடுத்து ஜனாதிபதி தற்போதைய அரசியல்மற்றும்பொருளாதாரநிலைமைகளை எடுத்துக்கூறும்விதமாகமகாசங்கத்தினருடன் சிறிது நேரம் கலந்துரையாடினார்.

அதன்போதுநாட்டின்வளங்களைகெண்டு உச்சகட்ட பலன்களை அடைந்து வலுவான நாட்டை கட்டியெழுப்ப வேண்டுமென வலியுறுத்திய மகாநாயக்க தேரர்கள், அதனால் இலங்கை உலகில் சுயாதீன நாடாக எழுந்து நிற்க முடியும் என்றும் தெரிவித்தனர்.

பாராளுமன்ற தேர்தல் ஒன்று அறிவிக்கப் பட்டிருக்கும் தருணத்தில் அரசியல் ரீதியான அமைதிக் காலம் நிலவுவதாக சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, செய்ய வேண்டியுள்ள பல்வேறு பணிகளைதேர்தலில்கிடைக்கும்முழுமையான பாராளுமன்றஅதிகாரத்தைகொண்டுதுரிதமாக செயற்படுத்த எதிர்பார்த்திருப்பதாகவும் தெரிவித்தார்.

இம்முறை தேர்தலின் போது எவ்வித வன்முறைகளுக்கும் கலவர நிலைமைகளுக்கும் இடமளிக்காமல் ஜனாதிபதி தலைமையிலான குழுவினர் எடுத்துக்காட்டாக செயலாற்றிமைக்கு மகா சங்கத்தினர் பாராட்டு தெரிவித்தனர்.

கடந்த ஜனாதிபதி தேர்தலின் போது மதத்தை முன்னிலைப்படுத்தி தற்போதைய ஜனாதிபதிக்குஎதிராகஅவதூறுபிரசாரங்களை சிலர் முன்னெடுத்துச் சென்றதாகவும் அவை அனைத்தும் உண்மைக்கு புறம்பானவை என்பது தற்போது உறுதியாகியுள்ளதாகவும் இதன்போது மகாசங்கத்தினர் சுட்டிக்காட்டினர்.

இருப்பினும் இதுபோன்ற அவதூறு பிரசாரங்கள் எதிர்காலத்திலும் முன்வைக்கப் படலாம்என்பதால்அதுகுறித்துஅவதானத்துடன் செயற்படுமாறும் மகா சங்கத்தினர் ஜனாதிபதியிடம் வலியுறுத்தினர்.

சம்பிரதாய அரசியல் முறை மாற்றப்பட வேண்டும் என்பது ஜனாதிபதித் தேர்தல் முடிவுகள் ஊடாக தெரியவந்திருப்பதாக சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, அவதூறுகளால் தமது தரப்பினர் குறித்து தோற்றுவிக்கப்பட்ட விம்பத்தை மக்கள் புறக்கணித்திருப்பதால், அவை அனைத்தும் போலிகள் என்பது உறுதியாகியுள்ளது என்பதையும் சுட்டிக்காட்டினார்.

இதன்போது புதிய அரசியலமைப்பு குறித்தும் மகா சங்கத்தினர் ஜனாதிபதியிடம் வினவினர்.

அதன்படி, புதிய அரசியலமைப்பொன்று கொண்டுவரப்பட வேண்டும் என்பதே தமது நோக்கமாகும் என்றும். நீண்ட கலந்துரையாடல்கள் மற்றும் பொதுமக்கள் வாக்கெடுப்பின் ஊடாக மாத்திரமே அதனை செய்ய எதிர்பார்த்திருப்பதாகவும், கடந்த அரசாங்கங்கள் அரசிலமைப்பு திருந்தங்களைதமதுதேவைகளுக்குஏற்பவே செய்துகொண்டதாகவும், மக்களின்தேவைக்கு ஏற்ப திருத்தங்கள் செய்யப்படவில்லை என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

எவ்வாறாயினும் நாட்டை ஓரளவு ஸ்திரப்படுத்தி மக்கள் எதிர்பார்ப்புக்கு அமைவாக புதிய அரசியலமைப்பொன்றை கொண்டுவர எதிர்பார்ப்பதாகவும் ஜனாதிபதி மேலும் தெரிவித்தார்.

காலைக்கதிர் Kalaikkathir

# ரணில் தரப்பினருடன் இணைந்தார் முன்னாள் பிரதி அமைச்சர் மஹ்ரூப்



ஐக்கியதேசியகட்சியின்தலைவரும்முன்னாள் ஜனாதிபதியுமான ரணில் விக்ரமசிங்கவால் ஐக்கிய தேசியக் கட்சியின் திருகோணமலை மாவட்ட தவிசாளராகவும், மூதூர் தொகுதி அமைப்பாளராகவும் முன்னாள் பிரதி அமைச்சர் அப்துல்லாஹ் மஹ்ரூப் நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்த நியமனங்கள் கொழும்பு 07இல் உள்ள கட்சி அலுவலகத்தில் வெள்ளிக்கிழமை உத்தியோகபூர்வமாக வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

அப்துல்லாஹ் மஹ்ரூப் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் தேசிய அமைப்பாளர் பதவியை இராஜினாமா செய்துவிட்டு, ரணிலுடன் இணைந்துள்ளதுடன் ஐக்கிய தேசிய கட்சியின் அங்கத்துவத்தை இதன்போது ரணிலிடமிருந்து பெற்றுக்கொண்டார்.

அதன் பின்னர், ஊடகங்களுக்கு அவர் கருத்து தெரிவிக்கையில் –

சிறந்ததொரு தலைவனுக்கான உதாரணமாக ரணில் விக்ரமசிங்க விளங்குகிறார். முஸ்லிம் சமூகத்துக்காக குரல்கொடுத்தவர் இவரே. ரிசாத் பதியுதீன் சிறையில் அடைக்கப்பட்டபோதும் கூட நாடாளுமன்றில் குரல் கொடுத்தவர். எனவே தான் நன்றியுள்ளவர்களாக இருக்க வேண்டும்.

ரிசாத், ஹக்கீம் போன்றவர்கள் முஸ்லிம் சமூகத்தை ஏமாற்றி வருகின்றனர். அகில இலங்கை மக்கள் காங்கிரஸில் இருக்கும்போது தனித்து போட்டியிட வேண்டும் எனத் தெரிவித்தபோது ரிசாத்

மறுத்தார். இதனால் அக்கட்சியிலிருந்து வெளியேறி ரணிலுடன் இணைந்தேன்.

சஜித் பிரேமதாஸவால் ஆட்சிக்கு வர முடியாது. ஏனென்றால், 2019இல் போட்டியின்போது ஐக்கிய தேசிய கட்சியின் ரணிலின் வாக்கும் அங்கு இருந்தது. மூன்று தேர்தல்களில் இரு ஜனாதிபதி பொதுத் தேர்தலிலும் ஒரு பொதுத் தேர்தலிலும் தோல்வி கண்ட சஜித்துடன் இணைந்து ரிசாத் ஹக்கீம் சிறுபான்மையை எப்படி பாதுகாப்பது ஏமாற்றுகிறார்கள். பெரும்பான்மை ஆசனத்தை இம்முறை 113 ஐ இந்த அரசாங்கத்தால் பெற முடியாது.

எனவே, அநுரகுமாரவுடன் இணைந்து எதிர்காலத்தில் தேசிய அரசாங்கம் ஊடாக ஆட்சி அமைந்தால் ரணில் விக்ரமசிங்கவே பிரதமர் ஆகலாம் என கூறினார்.

எதிர்வரும் நாடாளுமன்ற தேர்தலில் திருகோணமலை மாவட்டத்தில் முதன்மை வேட்பாளராக சிலிண்டர் சின்னத்தில் ரணில் கூட்டணியில் போட்டியிடவுள்ளமை குறிப்பிடத்தக்கது.(05)

## மசாஜ் நிலைய போர்வையில் விபசார விடுதி : உரிமையாளர் உட்பட இரண்டு பேர் கைது

*கல்கிசை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட சொலமன் பீரிஸ் மாவத்தை பகுதியில் மசாஜ் நிலையம் என்ற போர்வையில் இயங்கி வந்த விபச்சார விடுதியொன்றின் உரிமையாளர் உட்பட இருவர் வெள்ளிக்கிழமை காலை கைது செய்யப்பட்டுள்ளனர் என கல்கிசை பொலிஸார் தெரிவித்தனர்.*

*கல்கிசை பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.*

*கும்புரேகம பிரதேசத்தை சேர்ந்த 43 வயதுடைய உரிமையாளரும் நுவரெலியா பிரதேசத்தை சேர்ந்த 26 வயதுடைய பெண்ணொருவருமே கைது செய்யப்பட்டுள்ளனர்.*

*இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கல்கிசை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.*

*(05)*

## இஸ்ரேல் – லெபனான் மோதலால் 32 இலங்கையர் பெய்ரூட்டில் தஞ்சம்

இஸ்ரேல் - லெபனான் மோதல் காரணமாக 32 இலங்கையர்கள் லெபனான் தலைநகர் பெய்ரூட்டில் உள்ள இலங்கை தூதரகத்தில் தஞ்சம் அடைந்துள்ளனர்.

இலங்கை தூதரகம் அவர்களுக்குத் தேவையான உதவிகளை செய்து வருவதோடு,அப்பகுதியில் உள்ள இலங்கையர்களுடன் தொடர் தொடர்பைப் பேணி வருவதாக வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த மோதலில் இலங்கை பிரஜைகள் எவரும் பாதிக்கப்படவில்லை என வெளிவிவகார அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது.

இதேவேளை, இலங்கையில் இருந்து இஸ்ரேலுக்கான விமானங்கள் வழமையாக இயங்க ஆரம்பித்துள்ளதாக இஸ்ரேலுக்கான இலங்கை தூதரகம் அறிவித்துள்ளது.

ஈரானின் ஏவுகணைத் தாக்குதல்களால் இரண்டு நாள்களாக இடைநிறுத்தப்பட்டிருந்த டுபாய் மற்றும் அபுதாபியிலிருந்து இஸ்ரேலுக்கான விமானங்கள் வெள்ளிக்கிழமை மீண்டும் ஆரம்பிக்கப்பட்டதாக தூதரகம் குறிப்பிட்டுள்ளது.

இஸ்ரேலுக்குச் செல்லத் திட்டமிடுபவர்கள் விமான நிலையத்திற்குச் செல்வதற்கு முன் அவர்களின் விமானங்களின் நிலை குறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் சரிபார்க்குமாறு தூதரகம் அறிவுறுத்தியது.

இஸ்ரேலிய தாக்குதல்களின் விளைவாக 127 குழந்தைகள் மற்றும் 261 பெண்கள் உட்பட 2,000 இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர் என லெபனானின் சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ளது.

லெபனான் முழுவதும் ஹெஸ்புல்லாவின் பேஜர்கள் மற்றும் தகவல் தொடர்பு சாதனங்களை குறிவைத்து இஸ்ரேலின் ஒழுங்கமைக்கப்பட்ட தாக்குதல்களால் மோதல் மேலும் தீவிரமடைந்துள்ளது.(05)

## பொதுத் தேர்தலுக்காக இதுவரை 122 பேர் கட்டுப்பணம் செலுத்தினர்

### தேர்தல் ஆணைக்குழு தகவல்

எதிர்வரும் நவம்பர் மாதம் 14 ஆம் திகதி நடைபெறவுள்ள பொதுத் தேர்தலில் போட்டியிடுவதற்கு 122 சுயேச்சைகுழுக்கள் கட்டுப்பணம் செலுத்தியுள்ளன எனத் தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

பொதுத் தேர்தலுக்கான கட்டுப்பணத்தை செலுத்துவதற்கான அறிவிப்பைத் தேர்தல் ஆணைக்குழு கடந்த செப்ரெம்பர் மாதம் 25 ஆம் திகதி வெளியிட்டிருந்தது.

அதன்படி, பொதுத் தேர்தலில் சுயேச்சை குழுவாக போட்டியிடுவதற்கு கொழும்பு மாவட்டத்திலிருந்து 12 வேட்பாளர்களும், கம்பஹா மாவட்டத்திலிருந்து 05 வேட்பாளர்களும், களுத்துறை மாவட்டத்திலிருந்து 04 வேட்பாளர்களும், கண்டி மாவட்டத்திலிருந்து 02 வேட்பாளர்களும், நுவரெலியா மாவட்டத்திலிருந்து 04 வேட்பாளர்களும், காலி மாவட்டத்திலிருந்து 01 வேட்பாளரும், மாத்தறை மாவட்டத்திலிருந்து 04 வேட்பாளர்களும் , அம்பாந்தோட்டை மாவட்டத்திலிருந்து 05 வேட்பாளர்களும், யாழ்ப்பாணம் மாவட்டத்திலிருந்து 15 வேட்பாளர்களும், வன்னி மாவட்டத்திலிருந்து 08 வேட்பாளர்களும் கட்டுப்பணம் செலுத்தியுள்ளனர்.

மேலும், மட்டக்களப்பு மாவட்டத்திலிருந்து 15 வேட்பாளர்களும், திகாமடுல்ல மாவட்டத்திலிருந்து 11 வேட்பாளர்களும், திருகோணமலை மாவட்டத்திலிருந்து 12 வேட்பாளர்களும், குருணாகல் மாவட்டத்திலிருந்து 02 வேட்பாளர்களும், புத்தளம் மாவட்டத்திலிருந்து 06 வேட்பாளர்களும், அநுராதபுரம் மாவட்டத்திலிருந்து 04 வேட்பாளர்களும் , பொலன்னறுவை மாவட்டத்திலிருந்து 1 வேட்பாளரும் , பதுளை மாவட்டத்திலிருந்து 02 வேட்பாளர்களும் , மொனராகலை மாவட்டத்திலிருந்து 03 வேட்பாளர்களும், இரத்தினபுரி மாவட்டத்திலிருந்து 03 வேட்பாளர்களும், கேகாலை மாவட்டத்திலிருந்து 03 வேட்பாளர்களும் கட்டுப்பணம் செலுத்தியுள்ளனர். (05)

## புறக்கோட்டையில் வீடொன்றில் தீ



கொழும்பு, புறக்கோட்டை, மிஹிந்து மாவத்தை பிரதேசத்தில் உள்ள வீடொன்றில் தீ விபத்து ஏற்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த தீ விபத்து சனிக்கிழமை இடம்பெற்றுள்ளதோடு, அருகில் இருந்த மேலும் இரண்டு வீடுகளில் தீ பரவியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவ இடத்திற்கு இரண்டு மாநகர சபையின் தீயணைப்பு படையினரால் தீ பரவல் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.(05)

## வன்னியில் சீலரத்தினதேரர் வேட்பு மனுத் தாக்கல்



வன்னிமாவட்டத்தில்நாடாளுமன்றதேர்தலுக்கான முதலாவது வேட்பு மனுவினை பத்தர முல்லே சீலரத்தினதேரர் தாக்கல் செய்தார். எதிர்வரும் நவம்பர் மாதம் இடம்பெறவுள்ள நாடாளுமன்ற தேர்தலில் வன்னித்தேர்தல் தொகுதியில் போட்டியிடுவதற்காக ஜனசெதபெரமுன தனது வேட்புமனுவினை வெள்ளிக்கிழமை தாக்கல்செய்துள்ளது.

வவுனியா மாவட்ட செயலகத்தில் அமைந்துள்ள தேர்தல் காரியாலத்தில் வேட்பு மனு தாக்கல் செய்யப்பட்டது.

இதன்போது கட்சியின் தலைவர் சீலரத்தினதேரர் மற்றும் ஆதரவாளர்கள் கலந்துகொண்டிருந்தனர். (05)

காலைக்கதிர்
Kalaikkathir

## நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

# பெண்கள் முன்வரவேண்டும்

**தேர்தலில் பெண்களுக்கு அதிகளவில் இடம் ஒதுக்கப்படவேண்டும் என்கிற குரல்கள் ஒருபுறத்தில் ஒலிக்கின்ற அதேவேளை, தேர்தலில் போட்டியிடப் பெண்கள் போதியளவில் முன்வருகிறார்கள் இல்லை என்கிற குரல்களையும் கேட்க முடிவதை வினோதமானது.**

**அண்மையில் யாழ்ப்பாணத்தில் கூடிய பெண் அரசியலாளர்கள் தமக்கு வேட்பாளர் பட்டியலில் 50 சதவீத ஒதுக்கீடு வழங்கப்படவேண்டும் என்று கேட்டார்கள். குறைந்தபட்சம் மாவட்டத்திற்கு மூன்று வேட்பாளர்களாவது பெண்களாக இருக்கவேண்டும் என்றும் கேட்டார்கள். கட்சிகள் பெண்களைப் பயன்படுத்திக்கொண்டாலும் அவர்களை உயர் பதவிகளுக்கு வரவிடுவதில்லை என்கிற குற்றச்சாட்டையும் முன்வைத்தார்கள். அவை நியாயமான கோரிக்கைகளாகவே இருந்தன. இலங்கையின் மக்கள் எண்ணிக்கையில் அரைவாசிக்கும் அதிகமானவர்களாக இருக்கும் பெண்களுக்கு அவர்களின் வாழ்க்கையை நிர்ணயிக்கும் அரசியலில் உரிய இடம் வழங்கப்படவேண்டியது அவசியம்.**

**கட்சிகள் அவர்களுக்கு அரைவாசி இடங்களை வழங்காவிட்டாலும் குறிப்பிட்டளவு ஆசனங்களை ஒதுக்குவதற்கு இப்போது தயாராகி இருக்கின்றன. குறைந்தபட்சம் 30 சதவீத ஒதுக்கீட்டையாவது வழங்குவதற்கு அவை தயாராகி உள்ளன. அதற்காக ஆட்களைத் தேடுகின்றன. கட்சிச் செயற்பாடுகளில் அதிகளவில் பெண்கள் இல்லாத காரணத்தால் பொருத்தமான வேட்பாளர்களைத் தேடுவது சிரமமாக இருப்பதாக அவை தெரிவிக்கின்றன. சமூகத்தால் நன்கறியப்பட்ட பெண்களும் ஏற்கனவே பொதுச் சேவையாளர்களாக உள்ள பெண்களும் அரசியலுக்கு வர அஞ்சுகின்றார்கள். தேர்தலில் போட்டியிட முன்வருகின்றார் இல்லை என்பது கட்சிகளின் குறையாக இருக்கின்றது.**

**இந்த நிலமை மாறவேண்டும். பெண்களுக்குச் சமஉரிமை என்பது பெறும் கூக்குரலாக இருக்கக்கூடாது. அதனைப் பெறுவதற்கும் உரிமைப் போராட்டத்தை நடத்துவதற்கும் பெண்கள் தாராளமாக முன்வரவேண்டும். அரசியல் பயில்தல் அவர்களுக்கு முக்கியமானது. ஆணாதிக்க அரசியலால் அதிகம் பாதிக்கப்படுபவர்களாகவும் ஒடுக்கப்படுபவர்களாகவும் அவர்களே இருக்கும் நிலையில் அரசியல் களத்திற்கு அதிகளவில் அவர்கள் திரள்வது காலத்தின் தேவை. அரசியல் ஒரு சாக்கடை என்ற ஒதுங்கி நிற்க முடியாது; ஒதுங்கி நிற்கக்கூடாது.**

**அரசியல் கட்சிகளும் இந்த நிலமை குறித்து சுயபரிசீலனை செய்யவேண்டும். பெண்கள் அரசியலுக்கும் கட்சிகளுக்கும் வருவதற்கு ஏன் பயப்படுகின்றார்கள் என்பதைத் தெரிந்துகொள்ள வேண்டும். உட்கட்சிச் சூழலும் பொது வெளியும் ஆணாதிக்கசிந்தனைகளாலும் கட்டுப்பாடுகளாலும் நிறைந்திருப்பதன் காரணமாகத்தான் பெண்களால் அரசியலுக்குள் நுழைய முடியாத நிலை இருக்கின்றது என்பதைப் புரிந்துகொள்ளவேண்டும். அந்தச் சூழலை மாற்றுவதற்கான உளப்பூர்வமான இதயசுத்தியுடனான முயற்சிகளை எடுக்கவேண்டும்.**

**கட்சியின் கீழ்நிலைகளில் இருந்தே பெண் அரசியல் செயற்பாட்டாளர்களை வளர்த்தெடுக்க நடவடிக்கை எடுக்கவேண்டும். அப்படியான செயற்பாட்டாளர்களின் பணிகளை மதித்து அவர்களுக்கு கட்சியிலும் அரசியலிலும் உரிய இடங்களை வழங்க முன்வரவேண்டும். கட்சிகளில் சிறப்பான முன்னுதாரணங்கள் இருக்கும்பட்சத்திலேயே பெண்களும் அரசியலுக்கு வருவதற்குத் துணிந்து முன்வருவார்கள். கட்சிகளுக்குள் இருக்கும் பெண்கள் கிள்ளுக் கீரைகளாக நினைத்து ஒதுக்கப்படும் நிலமை இருக்கும் வரையில் புதியவர்கள் அரசியலுக்குள் நுழைய அச்சப்படுவார்கள்தான்.**

**இரண்டு பக்கங்களிலும் மாற்றம் ஏற்படுத்தப்படுவதன் மூலம்தான் இந்த விடயத்தில் ஒரு முன்னேற்றத்தை அடையமுடியும். இரு தரப்புக்களுமே வெறும் பேச்சையும் அறைகூவல்களையும் விடுத்து செயல்களில் மாற்றத்தைக் கொண்டுவரவேண்டும்.**

# ஒழுக்கமே சுதந்திரம்

நசீர் அதாவுல்லாஹ்

ஒழுக்கமும், சுதந்திரமும் நாணயத்தின் இரு பக்கங்கள். ஒழுக்கமற்ற, கட்டுப்பாடுகள் இல்லாத சுதந்திரம் என்பது உண்மையிலேயே அநாகரிகத்துக்கும், இழிவுக்கும் காரணமாகிவிடும்.

நமது நாடு பண்பாடு, கலாசாரம், ஒழுக்க ரீதியாக மேம்பட்டது. அறம் செய்ய விரும்பு என்று ஒழுக்கத்துடன் இணைத்தே சிறார்களுக்குக் கல்வி புகட்டுகிறோம். பெற்றோர்களைக் கண்ணியப்படுத்துதல், ஆசிரியர்களை மதித்தல், உறவுகளை பேணுதல், மூத்தோர்களை நேசித்தல் நமது மக்களின் வாழ்க்கை முறையாக உள்ளது. இன்று நமது இளைய சமூகம் படிப்படியாக ஒழுக்க வீழ்ச்சியின் பக்கம் சென்று கொண்டிருப்பதை ஊடகச் செய்திகள், அன்றாட வாழ்க்கை அனுபவங்கள் மூலமாக நாம் வேதனையுடன் கண்டு வருகின்றோம்.

நாட்டின் எதிர்காலமாக திகழ்கின்ற நமது பெரும்பான்மையான இளைய சமூகம் இப்பொழுது ஆபாச ஆடல் பாடல்களுக்கும், போதைக்கும் அடிமையாகி படிப்படியாக ஒழுக்க வீழ்ச்சியின் பக்கம் சென்று கொண்டு தனது அடையாளத்தை மறந்து வாழ்கிறது. இன்று நமது நாட்டிற்குத் தேவை ஒழுக்கப் புரட்சிதான் என்றால் அது மிகையல்ல. இதற்கான முயற்சி இல்லையேல் நமது நாட்டில் அறிவுஜீவிகளின், ஆராய்ச்சியாளர்களின், சான்றோர்களின் வளர்ச்சி படிப்படியாக குன்றிப்போய் விடும்.

நாட்டின் வளர்ச்சிக்கு உரமாக இருக்க வேண்டிய நமது இளைய சமுதாயத்தை ஒழுக்க வீழ்ச்சியிலிருந்து எப்படி பாதுகாப்பது என்பதைப் பற்றிய கவலையும், சரியான திட்டமிடலும் காலத்தின் கட்டாயம். உண்மையான சுதந்திரம் என்ன? கட்டுப்பாடு அற்ற, போலியான சுதந்திரம் எத்தகைய நாசத்தின் பக்கம் இட்டுச் செல்லும் என்பதை நாம் இளையோருக்கும், மாணவர்களுக்கும் போதிக்க வேண்டும்.

போதையின் பிடிக்குள் சிக்காதவர்களை பாதுகாப்பது எப்படி? போதையின் பிடியில் சிக்கித் தடுமாறுபவர்களை மீட்கத் தேவையான மனநல ஆலோசனைகள், மருத்துவ ஏற்பாடுகள் செய்வது போன்றவை அதிமுக்கியத்துவம் பெறுகிறது.

அனைத்துக்கும் இளைய சமுதயத்தின் மீது மட்டும் பழி போட்டுவிட முடியாது. மனநல ஆலோகர்களின் கருத்துப்படி இத்தகைய சூழ்நிலைக்கு இளைஞர்கள் தள்ளப்படுவதற்கு குடும்ப சூழல் பிரதான காரணமாக அமைகிறது. பெற்றோர்களின் கவனக் குறைவு, வீட்டுச் சண்டைகள், பிள்ளைகளுடன் போதிய நேரம் செலவிடாமை, பெற்றோர்களே தவறான முன்மாதிரியாக இருப்பது, ஒற்றை குடும்ப அமைப்பு போன்ற வீட்டு சூழல்களும் பிள்ளைகளை மன உளைச்சல், தீய பழக்கங்களுக்கு இட்டுச் செல்கிறது.

வீட்டில் அமைதி இல்லையேல் வீதியில் ஏது அமைதி! அமைதியைத் தேடி புறப்பட்ட பிள்ளைகள் மன அமைதி என்ற தவறான கணிப்பில் வழிமாறிச் சென்று போதை மற்றும் ஆபாசத்தின் பாதையைத் தேர்ந்தெடுக்கிறார்கள். இவர்களுக்குத் தேவை உளவியல் சிகிச்சையே தவிர நமது வெறுப்போ, புறக்கணிப்போ அல்ல. அவர்களை நாம் கருணையுடன் அணுக வேண்டும். நோய்தான் எதிரியே தவிர, நோயாளி அல்ல.

பெற்றோர்களுக்கு அடுத்து மாணவர்களின் முன்மாதிரியாக திகழ்பவர்கள் ஆசிரியர்களே. வீட்டைவிட அதிக நேரம் கல்விக்கூடங்களில்தான் மாணவர்கள் இருக்கின்றார்கள். தனக்கு ஒரு வழிகாட்டி கிடைக்க மாட்டார்களா என்று ஏங்கும் மாணவர்களுக்கு ஆசிரியர்களை விட சிறந்த முன்மாதிரி யார் தான் இருக்க முடியும்? எனவே மாணவர்-ஆசிரியர் மத்தியிலான இடைவெளி நிரப்பப்பட வேண்டும். வருங்கால சிறந்த சமுதாயத்தை உருவாக்குவதில் ஆசிரியர்களுக்கு கணிசமான பங்கு இருக்கிறது.

பெற்றோர்கள், ஆசிரியர்களின் கவனம் இளைஞர்கள் மீது போதிய அளவில் இல்லாமல் போனதுதான் இன்றைய அவல நிலைக்கு பிரதான காரணம் என்கிறார்கள் சமூக ஆய்வாளர்கள். இந்த நிலையை சரி செய்தால் வீட்டு சூழலும், நாட்டு சூழலும் மாறும் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை.

இளைய சமூகத்தை ஆக்கபூர்வமான பணிகளில் திசை மாற்றும் ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும். மதிப்பெண்கள் மட்டும்' என்ற எண்ணத்தை தாண்டி பள்ளி, கல்லூரி நிர்வாகங்கள் அறம் சார்ந்த நல்லொழுக்கப் போதனைகள் மீது மாணவர்களின் கவனத்தை ஈர்க்க வேண்டும்.

பாடசாலை, பல்கலைக்கழக சேர்க்கையின் பொழுது ஒழுக்க சான்றிதழ் பெறுவது கட்டாயமாக்கப்படவேண்டும்.

பொது இடங்களில் அநாகரிகக் காட்சிகளை, ஒழுக்கக் கேட்டைக் கண்டால் அது தொடர்பாக புகார் தெரிவிக்க வேண்டிய இலவச தொடர்பு எண்ணை அறிமுகப்படுத்த வேண்டும்.

ஒரு தொழிற்சாலையில் விசவாயுக் கசிவு ஏற்பட்டால் போர்க்கால அடிப்படையில் அதணைச்சரிசெய்வதற்கான அனைத்து நடவடிக்கைகளும் முடுக்கி விடப்படும். சுற்றுச்சூழல் பாதுகாப்பு, விபத்துக்கான காரணங்களை கண்டறிதல், பொறுப்பற்ற அலுவலர்களைத் தண்டித்தல் போன்ற நடவடிக்கைகள் விரைந்து மேற்கொள்ளப்படும். அவ்வாறே சமூகத் தீமைகள் விடயத்திலும் நாம் செயல்பட வேண்டும்.

வாகனம் என்னுடையதுதான்; ஓட்டுநர் உரிமமும் இருக்கிறது என்றாலும், சாலை விதிகளை மீறினால் விபத்து நிச்சயம். இவ்வாறே கட்டுப்பாடற்ற சுதந்திரமும் ஆபத்தானதுதான். வீதியில் கை வீசிச் செல்லும் சுதந்திரம் எதிரே வருபவரின் மூக்கின் நுனி வரையில்தான் செல்லுபடியாகும். சுதந்திரத்திற்கும் ஒரு ஒழுக்க கட்டுப்பாடு அவசியம். மீறினால் மன அழுத்தம், மண முறிவுகள், ஒழுக்க சீர்கேடு, சச்சரவுகள், விபத்துகள்... இவற்றிலிருந்து நாம் தப்ப முடியாது.

தீமைகளின் வாயில்களைத் திறந்து வைத்துவிட்டு ஒழுக்கமுள்ள நல்ல சமூகத்தை எதிர்பார்ப்பது பகற்கனவே.

# நாடாளுமன்றத் தேர்தலுக்கான நியமன பத்திரம் தாக்கல் மட்டக்களப்பு மாவட்டத்தில் தொடக்கம்

எதிர்வரும் நவம்பர் மாதம் 14ஆம் திகதி நடைபெறவுள்ள நாடாளுமன்ற தேர்தலுக்கான வேட்பு மனுக்கள் தாக்கல் செய்யும் நடவடிக்கைகள் வெள்ளிக்கிழமை நாடளாவிய ரீதியில் ஆரம்பமாகியது.

இதன் அடிப்படையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் நியமனப் பத்திரம் ஏற்கும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டதாக மட்டக்களப்பு மாவட்ட தெரிவித்தாட்சி அதிகாரியும் மாவட்ட செயலாளருமான ஜே.ஜே. முரளிதரன் தெரிவித்தார்.

மாவட்டத்தில் 15 இற்கும் மேற்பட்ட சிகிச்சை குழுக்கள் கட்டுப்பணம் செலுத்தியுள்ளன. இன்று முதலாவது நியமன பத்திரம் தாக்கல் செய்யும் நடவடிக்கை இடம்பெற்றது. மோகன் டிலான் என்பவரின் தலைமையில் நியமனப்பத்திரம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மாவட்டத்தில் ஐந்து நாடாளுமன்ற உறுப்பினர் தெரிவு செய்வற்காக எட்டு பேர் போட்டியிடுகின்றனர். நான்கு லட்சத்தி 49 ஆயிரத்து 686 பேர் வாக்களிக்க தகுதி பெற்றுள்ளார்கள் மட்டக்களப்பு பட்டிருப்பு கல்குடா ஆகிய தேர்தல் தொகுதிகளில் தேர்தல்கள் இடம் பெற உள்ளன.

442 வாக்கு அளிப்பு நிலையங்களில் வாக்களிப்பு இடம்பற உள்ளமையும் குறிப்பிடத்தக்கது. வேட்பு மனுத் தாக்கல் நடவடிக்கை ஆரம்பமானது தொடர்ந்து மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் பாதுகாப்பு பாதுகாப்பு நடவடிக்கைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

(05)

# லொத்தர் சீட்டு இலக்கங்களுக்கு பந்தயம் வைத்த மூவர் கைது

பதுளை, கிராந்துருகோட்டை பிரதேசத்தில் தேசிய லொத்தர் சபையால் வெளியிடப்படும் லொத்தர் சீட்டுகளின் இலக்கங்களுக்கு பணம் பந்தயம் வைத்ததாக கூறப்படும் மூன்று பெண்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என கிராந்துருகோட்டை பொலிஸார் தெரிவித்தனர்.

கிராந்துருகோட்டை பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கிராந்துருகோட்டை மற்றும் ஜயமாவத்தை ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த 42, 43 மற்றும் 48 வயதுடைய மூன்று பெண்களே கைது செய்யப்பட்டுள்ளனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கிராந்துருகோட்டை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

(05)

# புறக்கோட்டையில் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு ஒருவர் படு கொலை

கொழும்பு, புறக்கோட்டை, ரெக்மலேஷன் வீதியில் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு ஒருவர் கொலை செய்யப்பட்டுள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவம் நேற்று (சனிக்கிழமை) அதிகாலை 1.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

மஹியங்கனை பிரதேசத்தைச் சேர்ந்த 33 வயதுடைய நபரொருவரே கொலை செய்யப்பட்டுள்ளார்.

இந்த சம்பவம் மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

(05)

# கொழும்பில் விபத்து சிறுவன் உயிரிழப்பு

கொழும்பு, கொட்டாஞ்சேனை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட மேபீல்ட் சந்தியில் இடம்பெற்ற விபத்தில் சிறுவன் ஒருவன் உயிரிழந்துள்ளான் என கொட்டாஞ்சேனை பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்து வெள்ளிக்கிழமை மாலை இடம்பெற்றுள்ளது.

பொருள்களை ஏற்றிச் சென்ற லொறி ஒன்று மற்றுமொரு லொறியுடன் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தின் போது, பொருள்களை ஏற்றிச் சென்ற லொறியில் இருந்த சிறுவன் ஒருவன் படுகாயமடைந்துள்ள நிலையில் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளான் என பொலிஸார் தெரிவித்தனர். கிளிநொச்சி பிரதேசத்தைச் சேர்ந்த 16 வயதுடைய சிறுவனே உயிரிழந்துள்ளார். இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கொட்டாஞ்சேனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)

# கொள்ளைச் சந்தேகநபர்கள் மூவருக்கும் விளக்கமறியல்

யாழ்ப்பாணத்தில் தனது காணியை விற்றுப் பெற்ற பணத்தை கொண்டுசென்ற நபரை இருவர் வழிமறித்து ஒரு கோடி ரூபா பணம், கையடக்கத் தொலைபேசி கடவுச்சீட்டு முதலியவற்றை கொள்ளையடித்துச் சென்ற சம்பவம் தொடர்பில் காணி விற்பனை தரகர் உட்பட மூவர் கைது செய்யப்பட்டனர்.

இதனையடுத்து, சந்தேக நபர்கள் மூவரையும் விளக்கமறியலில் வைக்குமாறு மல்லாகம் நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது –

யாழ்ப்பாணம், சங்குவேலி பகுதியைச் சேர்ந்த நபரொருவர் தற்போது வெளிநாட்டில் வசித்து வரும் நிலையில், அண்மையில் யாழ்ப்பாணம் வந்திருந்தார்.

அவர் கடந்த புதன்கிழமை சேந்தான்குளம் பகுதியில் உள்ள தனது காணியை விற்று, அதனூடாக பெற்ற பணத்துடன் வீடு திரும்பிக்கொண்டிருந்தவேளை, மோட்டார் சைக்கிளில் பின்தொடர்ந்து வந்த இருவர் அவரை வழிமறித்துள்ளனர்.

பின், அவரை தாக்கிவிட்டு பணம், கடவுச்சீட்டு, பெறுமதியான கையடக்க தொலைபேசி என்பவற்றை கொள்ளையடித்துவிட்டு தப்பிச் சென்றுள்ளனர்.

அதனையடுத்து, பொலிஸார் தீவிர விசாரணையில் ஈடுபடத் தொடங்கினர்.

காணி விற்பனைக்கான உறுதிப்பத்திரம் எழுதப்பட்டு சட்டத்தரணி முன்னிலையில் பணம் கைம்மாற்றப்பட்டபோது, காணி விற்பனை தரகரும் அவ்விடத்தில் இருந்துள்ளார். அத்தோடு, காணி விற்பனையாளர் பணத்துடன் வீடு திரும்பும்போதே பணம் கொள்ளையடிக்கப்பட்டுள்ளது.

அதன் அடிப்படையில், சந்தேகத்தின் பேரில் காணி விற்பனை தரகரை பொலிஸார் விசாரணைக்கு உட்படுத்தியபோது, ஊரெழு பகுதியில் உள்ள தரகரின் வீட்டிலிருந்து, கொள்ளையடிக்கப்பட்ட பணம், கையடக்கத் தொலைபேசி முதலானவற்றை பொலிஸார் கண்டெடுத்து கைப்பற்றியுள்ளனர்.

காணி விற்ற நபர் பணத்தோடு செல்வதாக தரகர் தனது மகனுக்கு தெரிவிக்க, தரகரின் மகன் தனது நண்பருடன் சென்று கொள்ளையடித்துள்ளதாக தரகர் பொலிஸாருக்கு தெரிவித்துள்ளார்.

இதனையடுத்து, சந்தேக நபர்கள் மூவரும் கைது செய்யப்பட்டு, மல்லாகம் நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டுள்ள நிலையிலேயே, கைதானவர்களை விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (05)



# தாமரை மலரைப் பறிக்கச் சென்ற பெண் நீரில் மூழ்கி பரிதாபச் சாவு

தாமரை மலர் பறிக்கச் சென்ற பெண்ணொருவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த பெண் வெள்ளிக்கிழமை கும்புக்கேட் பகுதியில் உள்ள புவக்வெல்ல ஏரியில் தாமரை மலர் பறிக்கச் சென்ற போதே நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர் கொகரெல்ல பிரதேசத்தை சேர்ந்த 61 வயதுடையவர் என்பதுடன், சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

(05)

# கிரிக்கெட் விளையாடிய மாணவன் வழுக்கி விழுந்து உயிரிழந்த சோகம்

கொட்டகலை கேம்பிரிட்ஜ் பாடசாலையில் கிரிக்கெட் விளையாடிக்கொண்டிருந்த மாணவனொருவர், பிடியெடுக்க முற்பட்டபோது வழுக்கி விழுந்து பாடசாலை கட்டடத்தில் மோதியதில் தலைப்பகுதியில் காயம் ஏற்பட்டு, உயிரிழந்துள்ளார்.

வெள்ளிக்கிழமை பாடசாலை இடைவேளை நேரத்தில் சக மாணவர்களுடன் கிரிக்கெட் விளையாடிக் கொண்டிருந்துள்ளார். பிடி எடுப்பதற்காக ஓடிய குறித்த மாணவன், கால் தடுக்கி விழுந்துள்ளார். அவரின் தலைப்பகுதி பாடசாலை கட்டடமொன்றின் சுவரில் மோதியதால் தலைப்பகுதியில் பலத்த காயம் ஏற்பட்டது.

இதனையடுத்து மாணவன், டிக்கோயா ஆரம்ப வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். அங்கிருந்து கண்டி வைத்தியசாலைக்கு கொண்டு செல்லும் வழியில் உயிரிழந்துள்ளார்.

மேற்படி கல்லூரியில் தரம் 13 இல் கல்வி பயிலும் தலவாக்கலை, கிரேட்வெஸ்டன் தோட்டத்தைச் சேர்ந்த சிவகுமார் நதீஸ் (வயது 18) என்ற மாணவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். சம்பவம் தொடர்பில் திம்புள்ள - பத்தனை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனமை குறிப்பிடத்தக்கது.(05)

# யாழில் உண்ணிக் காய்ச்சலால் பாதிக்கப்பட்ட யுவதி உயிரிழப்பு

உண்ணிக் காய்ச்சலால் பாதிக்கப்பட்ட யுவதியொருவர் வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் உயிரிழந்துள்ளார்.

மானிப்பாயைச் சேர்ந்த 19 வயது இளம் யுவதியே உயிரிழந்தவர் ஆவார்.

காய்ச்சல் காரணமாக இந்த யுவதி யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்தார்.

அவர் உண்ணிக் காய்ச்சலால் பீடிக்கப்பட்டிருந்தமை வைத்தியசாலையில் இனங்காணப்பட்டதையடுத்துது, 10 நாள்களாக தொடர் சிகிச்சை அளிக்கப்பட்டபோதிலும் சிகிச்சை பலனின்றி அவர் உயிரிழந்தார். (05)

# ஐஸ் போதைப்பொருளுடன் கல்கிசையில் ஒருவர் கைது

கல்கிசை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட ஓடியன் சந்திக்கு அருகில் ஐஸ் போதைப்பொருளுடன் சந்தேக நபர் ஒருவர் வியாழக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார் என கல்கிசை பொலிஸார் தெரிவித்தனர்.

கல்கிசை பொலிஸ் குற்றப் புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போதே சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மொரட்டுவை பிரதேசத்தை சேர்ந்த 44 வயதுடைய நபரே கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபரிடம் இருந்து 10 கிராம் 200 மில்லி கிராம் ஐஸ் போதைப்பொருள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கல்கிசை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

(05)

# அலரி மாளிகைக்கு அருகிலுள்ள வீதி பல ஆண்டுகளுக்குப் பின்னர் திறப்பு



கொழும்பு அலரி மாளிகைக்கு அருகில் கொள்ளுப்பிட்டி பள்ளிவாசலில் இருந்து ரொடுண்டா சுற்றுவட்டம் வரை செல்லும் வீதி வெள்ளிக்கிழமை பொதுமக்களின் பாவனைக்காக திறந்து வைக்கப்பட்டுள்ளது.

பாதுகாப்பு காரணங்களுக்காக நீண்ட காலமாக குறித்த வீதி மூடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்த வீதி திறக்கப்பட்டமையால் சுற்றுவட்டார பகுதிகளில் போக்குவரத்து நெரிசலை குறைப்பதோடு, பொதுமக்களுக்கு இலகுவாக பயணிக்க வழிவகுக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

(05)

வயலும் வயல்சார்ந்த இடமுமான 'மருதம்' நிலத்தில் பண்ணை வீட்டுடன் கூடிய செயற்திட்டம்



## சிலிண்டரில் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தீர்மானம்மேற்கொள்ளப்பட்டுள்ளன. எனினும் எதிர்வரும் பொதுத் தேர்தலுக்காக மாத்திரமே இந்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. உள்ளுராட்சி மன்றத் தேர்தலில் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி தலைமையிலான கூட்டணியுடன்புதியசின்னத்தில்போட்டியிடும் என்றார்.

## பெரும்பான்மை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உண்மையாகவும் உறுதிப்பாட்டுடனும் அடைவதற்கான இன்றியமையாத பின்வரும் நான்கு அம்சக் கோரிக்கைகளை தமிழ்மக்களின்நலன்கருதிஎம்அமைப்பானது முன்வைக்கின்றது.

இதற்கமைய குறிப்பிட்ட நான்கு அம்சக் கோரிக்கைகளையும் ஏற்றுக்கொள்ளும் எந்தவொரு அரசியல் கட்சிக்கும் அல்லது வேட்பாளர்களுக்கும் எமது அமைப்பானது ஆதரவு வழங்குவது தொடர்பாக பரிசீலிக்கும் என்பதனை பொதுமக்கள் முன்னிலையில் வெளிப்படுத்தி நிற்கின்றோம்.

முழுநாட்டிலும் மாற்றத்தை எதிர் பார்க்கின்ற மக்கள் இருக்கின்ற போதிலும் தமிழ் மக்கள் சிங்கள பெரும்பான்மைக்குள் கரைந்து போகாமல் தங்கள் தனித்துவத்துடன் ஒற்றுமையாக ஒருசேர நின்று மாற்றத்தை ஏற்படுத்துவதற்கான களத்தை உருவாக்கிக் கொடுக்க வேண்டியது கட்சிகளினதும் அரசியல் பிரமுகர்களினதும் தலையாய கடமையாகும்.

இதற்கான அழுத்தங்களினை பொது அமைப்புக்கள் இந்தக் குறுகிய நாட்களில் மிக வினைத்திறனாக முன்னெடுக்க வேண்டும்.

1. தமிழர்களின் அரசியல் தீர்வு தொடர்பான எந்த முன்னெடுப்பும் திம்பு கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்ட தாயகம், தேசியம், சுயநிர்ணயம் உள்ளடங்கலான இறுதித்தீர்வை எட்டும் நோக்குடன் முன்னெடுக்கப்பட வேண்டும்.

2. நடைபெற்று முடிந்த இன அழிப்பிற்கும் நடைபெற்றுக் கொண்டிருக்கும் இன அழிப்பிற்குமான பரிகார நீதியைப்பெறும் நோக்குடன் சர்வதேச நீதிக்கான பொறிமுறை உள்ளடக்கப்பட வேண்டும்.

3. இனப்பிரச்சனைக்கான அரசியல் தீர்வினைப் பெறும் நோக்குடன் சிங்கள அரசாங்கத்தோடு தமிழர் தரப்பால் முன்னெடுக்கப்படும். எந்தவொரு பேச்சு வார்த்தையிலும், ஏற்றுக் கொள்ளக்கூடிய மூன்றாம்தரப்புநாடுஒன்றின்நடுநிலையுடன் முன்னெடுக்கப்படவேண்டும்.

4. நடைபெற இருக்கும் பாராளுமன்றத் தேர்தலில் பழைய அரசியல் பிரமுகர்கள் வேட்பாளராக முன்னிறுத்தப்படுவது முற்றாகத் தவிர்க்கப்பட்டுசமூகப்பொறுப்புள்ளஅறிவார்ந்த இளைஞர், யுவதிகள் வேட்பாளர்களாக முன்னிறுத்தப்படுவது எம் இனத்தின் எதிர்காலத்திற்குத் தவிர்க்கப்படமுடியாத தேவையாக உள்ளது.

அத்தோடு இதில் பெண்களுக்கான பிரதிநிதித்துவம் ஆண்களுக்கு நிகராக 50 வீதம் வழங்கப்பட வேண்டும் என்பதும் முக்கியமாககொள்ளப்படவேண்டும்என அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## நாளை வரை ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரேமச்சந்திரன் தெரிவித்ததாவது:

தமிழ் மக்களின் உரிமைகளுக்காக பொதுக்கட்டமைப்பானது தொடர்ந்தும் பணியாற்றும் என்பதை நாம் இரு தரப்பும் ஏற்றுக்கொண்டிருக்கின்றோம். அந்தவகையில் இந்தப் நாடாளுமன்றத் தேர்தலில் ஜனநாயக தமிழ்தேசிய கூட்டமைப்பு சங்கு சின்னத்தில் போட்டியிடுவதற்கு தீர்மானித்துள்ளது. அதற்கு அமைவாக கூட்டணியில் போட்டியிடும் வேட்பாளர்கள் தொடர்பான இறுதி முடிவுகள் விரைவில் அறிவிப்போம். தற்போதைய நிலையில்யாழ்ப்பாணம், வன்னி, மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களுக்கான வேட்பாளர்கள் இறுதி செய்யப்பட்டுள்ளன.

இதேவேளை, நாங்கள் பிரிந்து நிப்பதால் திருகோணமலை மற்றும் அம்பாறை மாவட்டங்களின் பிரதிநிதித்துவங்களை இழந்துவிடும் நிலை இருக்கிறது. கடந்தமுறை அம்பாறையில் பிரதிநிதித்துவத்தினை இழந்தோம். இதற்கு முன்னதாக திருகோணமலை மற்றும் அம்பாறையில் ஒவ்வொரு தடவை பிரதிநிதித்துவங்களை இழந்துள்ளோம்.

ஆகவே, தமிழ் மக்களின் பிரதிநித்துவத்தினை உறுதி செய்வதில் நாம் ஒத்துழைப்புடன் செயற்படுவதற்கு தயராகவே உள்ளோம். அதற்காக நாம் தமி;ழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா, பொதுச்செயலாளர் சத்தியலிங்கம் மற்றும் சிவஞானம் சிறிதரன் ஆகியோர் கொண்ட குழுவினருடன் பேச்சு நடத்தியிருந்தோம்.

இதன்போது திருகோணமலையில் தமிழ் அரசுக்கட்சியின்சின்னத்திலும், அம்பாறையில் எமது சின்னத்திலும் போட்யிடுவதற்கு இணக்கம்கண்டிருந்தோம். ஆனால்தற்போது அந்தக் கட்சியின் பேச்சாளர் சுமந்திரன் ஐந்து மாவட்டங்களிலும் தமிழ் அரசுக் கட்சி வீட்டுச் சின்னத்தில்போட்டியிடுவதாகஅறிவித்துள்ளார். அது கட்சியின் உத்தியோகபூர்வமான முடிவா இல்லை அவரது தனிப்பட்ட முடிவா என்பது எமக்குத் தெரியாது. எனினும் தமிழ் மக்களின் நன்மை கருதி ஏற்கனவே இணக்கம் காணப்பட்டதற்கு அமைவாக, நாம் தமிழ் அரசுக் கட்சியுடன் இணைந்து போட்டியிடுவதற்கு தயராகவே உள்ளோம். எனவே நாளை திங்கட்கிழமைக்கு முன்னர் உத்தியோபூர்வமான பதிலை அறிவுக்குமாறு நாம் அவர்களிடம் கேட்டுக்கொள்கின்றோம்.

இலங்கைத் தமிழ் அரசு கட்சியின் தற்போதைய அறிவிப்பின் பிரகாரம் அக்கட்சி செயற்படுவதாக இருந்தால் திருகோணமலை மற்றும் அம்பாறை மாவட்டங்களில் பிரதிநிதித்துவ இழப்பிற்கு அக்கட்சியே காரணமாக அமையும்.

தமிழ் அரசுக் கட்சியைப் பொறுத்தவரையில் தமக்கு தேசியபட்டியலில் ஒரு ஆசனத்தினையோ அல்லது இரண்டு ஆசனத்தினையோபெற்றுக்கொள்ளவேண்டும் என்பது தான் நோக்கமாக உள்ளது.

அதற்காக இரண்டு பிரதிநிதித்துவங்களை இழப்பது ஏற்றுக்கொள்ள முடியாதவொரு விடயமாகும். ஏனென்றால் அம்பாறையில் தமிழர் பிரதிநிதித்துவம் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதற்காக சேனதிராசா அங்கு சென்று போட்டியிட்டிருந்தார்.

ஆகவே வடக்கு, கிழக்கு பிரச்சினைகள் பற்றிய புரிதல் சேனாதிராசாவுக்கு உள்ளது. அதுகுறித்த புரிதல் சுமந்திரனுக்கு இருக்குமா இல்லையா என்பது எனக்கு தெரியாது என்றார்.

## நிச்சயமற்ற ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பதிலளிக்கையிலேயே ஜூலி கொஸாக் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

சர்வதேசநாணயநிதியத்தினால்இலங்கையுடன் இணக்கப்பாடு எட்டப்பட்டிருக்கும் விரிவாக்கப்பட்ட நிதிவசதிச் செயற்றிட்டம் தொடர்பான இரண்டாம் கட்ட மீளாய்வு கடந்த ஜூன் மாதம் 12 ஆம் திகதி பூர்த்திசெய்யப்பட்டது. அதனையடுத்துஇலங்கையின்பொருளாதாரக் கொள்கைகள் மற்றும் மறுசீரமைப்புக்கு உதவக்கூடியவகையில் 336 மில்லியன் டொலர் நிதி உடனடியாக விடுவிக்கப்பட்டது.

பொருளாதார நடத்தைக் குறிகாட்டிகள் வலுவானவையாகக் காணப்படுவதுடன் மேம்பட்ட பொருளாதார வளர்ச்சி, பணவீக்க வீழ்ச்சி, உயர்வான கையிருப்பு, வருமான உட்பாய்ச்சல் அதிகரிப்பு என்பன உள்ளடங்கலாகமறுசீரமைப்புநடவடிக்கைகள் மூலமான விளைவுகளும் நேர்மறையான விதத்தில் பதிவாகியிருக்கின்றன.

இருப்பினும் நாம் ஏற்கனவே கூறியிருந்ததைப்போன்று நலிவுற்ற நிலையும், நிச்சயமற்ற தன்மைகளும் தொடர்கின்றன. ஆகவே மறுசீரமைப்பு நடவடிக்கைகளைத் தொடர்ந்துமுன்னெடுப்பதுமிகஅவசியமாகும்.

அதேபோன்று இலங்கைக்கும் சர்வதேச பிணைமுறிதாரர்களுக்கும் இடையில் கடந்த செப்டெம்பர் மாதம் 18 ஆம் திகதி எட்டப்பட்ட அடிப்படை இணக்கப்பாடு தொடர்பில் கருத்து வெளியிட்டுள்ள அவர், அது இலங்கையின் கடன்மறுசீரமைப்பு செயன்முறையில் குறிப்பிடத்தக்களவு முன்னேற்றம் அடையப்பட்டிருப்பதைக் காண்பிக்கிறது என்றார்.

## முன்னணியின் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கையொப்பமிட்டனர்.

தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் கொக்குவில்பகுதியில்உள்ளதலைமைஅலுவலகத்தில் கட்சியின் தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார்பொன்னம்பலம்தலைமையில்வேட்பாளர்கள் வேட்புமனுவில் கையெழுத்திட்டனர்.

அகில இலங்கை தமிழ் காங்கிரஸின் சைக்கிள் சின்னத்தில் தமிழ் தேசிய மக்கள் முன்னணி போட்டியிடுகின்றமை குறிப்பிடத்தக்கது.

# ராமண்ய பீடத்திற்கு சென்ற ஜனாதிபதி

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க நாராஹேன்பிட்டியில் அமைந்திருக்கும் ராமண்ய பீடத்திற்கு சென்று இலங்கை ராமண்ய பீடத்தின் மகாநாயக்க தேரர் வண. மகுலேவே விமலநாயக்க தேரரை சந்தித்து ஆசி பெற்றுகொண்டார்.

அநுநாயக்க தேரர்கள், பதிவாளர்கள் தலைமையிலான மகா சங்கத்தினர் இதன்போது கலந்துகொண்டிருந்ததோடு, அவர்கள் செத் பிரித் பாராயணம் செய்து ஜனாதிபதிக்கு ஆசி வழங்கினர்.

அதனையடுத்து ஜனாதிபதி தற்போதைய பொருளாதார அரசியல் நிலைமைகள் குறித்து மகா சங்கத்தினருக்கு எடுத்துக்கூறும் வகையில் சிறிது நேரம் கலந்துரையாடினார்.

தூதுவர்களை நியமிக்கும்போது, கற்ற, அறிவார்ந்த, வெளிநாடுகளில் இந்நாட்டை பிரதிநித்துவப்படுத்தக் கூடிய பொறுத்தமானவர்களை நியமிக்குமாறும், ஆளுநர்களை நியமிக்கும்போது அரசியல் நோக்களுங்காக அன்றி பொறுப்பானவர்களை நியமிக்குமாறும் மகா சங்கத்தினர் ஜனாதிபதியிடம் கேட்டுக்கொண்டனர்.

அதேபோல் அமைச்சுக்களின் செயலாளர் பதவிக்கும்பொறுத்தமானவர்கள்நியமிக்கப்பட வேண்டும் என்பதையும் வலியுறுத்தினர்.

தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிடப்பட்ட வாறு தீர்மானங்களை எடுப்பதே தமது நோக்கமாகும் என சுட்டிக்காட்டிய ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க, எதிர்வரும் பாராளு மன்ற தேர்தலின் பின்னர் உரிய மறுசீரமைப் புக்களை செய்ய எதிர்பார்த்திருப்பதாகவும் தெரிவித்தார். ஜனாதிபதி தேர்தலில் நாட்டு மக்கள் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தலைமையிலான குழுவினர் மீது வைத்த நம்பிக்கையை உறுதிப்படுத்தும் வகையில் மறுமலர்ச்சியை ஏற்படுத்துவதற்கு மகாசங்கத்தினர் ஆசி என்றும் ஜனாதிபதிக்கு கிட்டும் என வண. மகுலேவ விமலநாயக்க தேரர் தெரிவித்தார்.

## பொருளாதார....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வென்றெடுக்கப்பட்ட அடைவுகளைத்தொடர்ந்து பாதுகாப்பதுடன், அவற்றைஅடுத்தகட்டத்துக்குக் கொண்டுசெல்லவேண்டியதன் அவசியத்தை இலங்கைஅரசாங்கம்ஏற்றுக்கொண்டதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பொருளாதார மறுசீரமைப்புக்கள் தொடர்பில் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவுடனும், அவர் தலைமையிலான புதியஅரசாங்கத்துடனும்பேச்சுவார்த்தைகளை நடாத்தும் நோக்கில் சர்வதேச நாணய நிதியத்தின் ஆசிய, பசுபிக் திணைக்களத்தின் பணிப்பாளர் கிருஷ்ணா ஸ்ரீ னிவாசன் தலைமையில் நாணய நிதியத்தின் இலங்கைக்கான செயற்றிட்டப் பிரதானி பீற்றர் ப்ரூவர் முதலான அதிகாரிகள் குழுவினர் கடந்த நாட்டை வந்தடைந்தனர்.

இதன்போது அவர்கள் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க, பிரதமர் ஹரினி அமரசூரிய, வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத், இலங்கை மத்திய வங்கி ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க, திறைசேரி செயலாளர் மஹிந்த சிறிவர்தன மற்றும் புதிய அரசாங்கத்தின் பொருளாதார நிபுணர் குழுவில் அங்கம் வகிக்கும் உறுப்பினர்கள் உள்ளடங்கலாக பல்வேறு தரப்பினரையும்சந்தித்துகலந்துரையாடல்களை முன்னெடுத்திருந்தனர்.

இச்சந்திப்புக்களின் முடிவில் அறிக்கையொன்றை வெளியிட்டிருக்கும் கிருஷ்ணா ஸ்ரீனிவாசன்,

இலங்கை பொருளாதாரம் முகங்கொடுத்துவரும் பொருளாதார மற்றும் நிதியியல் சவால்கள் தொடர்பில் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவுடனும், ஆளும்தரப்பின் பொருளாதார நிபுணர் குழுவினருடனும் செயற்றிறன்மிக்க பேச்சுக்களை முன்னெடுத்தோம்.

2022ஆம் ஆண்டு மிக மோசமான பொருளாதார நெருக்கடிக்குள் வீழ்ந்ததன் பின்னர், நாட்டைமீண்டும்பொருளாதாரமீட்சிப் பாதையில் கொண்டுசெல்வதற்கு உதவிய, மிகக் கடினமான முயற்சிகளின் ஊடாக வென்றெடுக்கப்பட்ட அடைவுகளைத்தொடர்ந்து பாதுகாப்பதுடன், அவற்றைஅடுத்தகட்டத்துக்குக் கொண்டுசெல்லவேண்டியதன் அவசியத்தை இருதரப்பினரும் ஏற்றுக்கொண்டோம்.

அத்தோடு, மறுசீரமைப்பு நடவடிக்கைகளைத் தொடர்ந்து முன்னெடுத்துச்செல்வதில் ஆளும்தரப்பு அர்ப்பணிப்புடன் இருப்பதையிட்டு மகிழ்ச்சியடைகின்றோம். இலங்கை அதன் பொருளாதார மறுசீரமைப்பு இலக்குகளை அடைந்துகொள்வதற்கு அவசியமான முழுமையான ஒத்துழைப்பை வழங்குவதற்கு சர்வதேச நாணய நிதியம் தயாராக இருக்கின்றது.

நாணய நிதியத்தினால் அனுசரணை அளிக்கப்படும் விரிவாக்கப்பட்ட நிதி வசதிச் செயற்றிட்டம் தொடர்பான மூன்றாம் கட்ட மீளாய்வுக்கான திகதியொன்றை நிர்ணயிப்பதற்குரிய நடவடிக்கைகளை சர்வதேச நாணய நிதியமும் இலங்கையின் பொருளாதாரக் குழுவும் இணைந்து முன்னெடுக்கும் என்று குறிப்பிட்டுள்ளார்.

## சுரேஷ் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சுரேஷ் சாலே மீது குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டு வருகின்றன. குண்டு வெடிப்புக்களை நிகழ்த்தியவர்களுடன் அவருக்குத் தொடர்பு இருந்தது என்றும் கூறப்படுகின்றது.




# காணாமல்போன முதியவரின் சடலம் மகாவலி கங்கையிலிருந்து மீட்பு



காணாமல்போயிருந்த முதியவர் ஒருவர் மகாவலி கங்கையிலிருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார்

என நாவலப்பிட்டி பொலிஸார் தெரிவித்தனர்.

நாவலப்பிட்டி திஸ்பனை பிரதேசத்தைச் சேர்ந்த 71 வயதுடைய முதியவரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இவர் கடந்த ஆறு நாள்களாக காணாமல் போயிருந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

சடலமானது பிரேத பரிசோதனைக்காக நாவலப்பிட்டி மாவட்ட பொது வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை நாவலப்பிட்டி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.(05)

# நீர்வேலியில் புதிய மதுபானசாலைக்கு எதிர்ப்புக்காட்டி மக்கள் போராட்டம்





யாழ்ப்பாண நீர்வேலிப்பகுதியில் திறக்கப்படவுள்ள மதுபானசாலையினை எதிர்த்து பொதுமக்கள் வெள்ளிக்கிழமை ஆர்ப்பாட்டம் ஒன்றில் ஈடுபட்டனர்.

தற்போது அரசாங்கம் மதுபானசாலை அனுமதிகளை தடை செய்கின்ற போதும் புதிதாக வழங்கப்பட்ட அனுமதியின் பிரகாரம் நீர்வேலிப்பகுதியில் மதுபானசாலை ஒன்றை தொடர்ந்து திறப்பதற்கான ஏற்பாடுகள் இடம்பெற்றவரும் நிலையில் அதனை உடனே நிறுத்துமாறு கோரி கோப்பாய் பிரதேச செயலகத்துக்கு முன்பாக வெள்ளிக்கிழமை மாலை இந்த ஆர்ப்பாட்டம் எடுக்கப்பட்டது.

நீர்வேலி பகுதியில் அத்தியார் இந்துக்கல்லூரி, கந்த சுவாமி கோவில் என்பவற்றிற்கு அருகிலே குறித்த மதுபான சாலை திறக்கப்படவுள்ளதால் பாடசாலை மாணவர்கள் கோயிலுக்கு செல்லும் பக்தர்கள் இதனால் பாதிக்கப்படுவதாகவும் இதனை உடனடியாக நிறுத்த கோரியும் பிரதேசவாதிகள் ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்தனர்.

குறித்த விடயம் அடங்கிய மகஜர் ஒன்றையும் கோப்பாய் பிரதேச உதவி பிரதேச செயலர் சஞ்சீவன் ராதிகாவிடம் பொதுமக்கள் கையளித்தனர்.(05)

# கண்டியில் பிரான்ஸ் பெண்மீது பாலியல் துஷ்பிரயோகம்

## பொதுமக்கள் குற்றச்சாட்டு

கண்டி பிரதேசத்தில் உள்ள ஹோட்டல் அறையில் வைத்து பிரான்ஸ் நாட்டுப் பெண்ணொருவரை பாலியல் துஷ்பிரயோகம் செய்ததாக கூறப்படும் சந்தேக நபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என கண்டி சுற்றுலா பொலிஸ் பிரிவினர் தெரிவித்தனர்.

கண்டி, குண்டசாலை பிரதேசத்தைச் சேர்ந்த 30 வயதுடைய நபரொருவரே கைது செய்யப்பட்டுள்ளார்.

இது தொடர்பில் தெரியவருவதாவது -

30 வயதுடைய பிரான்ஸ் நாட்டுப் பெண் ஒருவர் சுற்றுலாவுக்காக இலங்கைக்கு வந்துள்ள நிலையில், கண்டி பிரதேசத்தில் உள்ள ஹோட்டல் ஒன்றின் அறையில் தங்கியிருந்துள்ளார்.

இதன்போது, சந்தேக நபர் அந்த ஹோட்டல் அறைக்கு அத்துமீறி நுழைந்து பிரான்ஸ் பெண்ணை பாலியல் துஷ்பிரயோகம் செய்துள்ளார்.

பின்னர், பாதிக்கப்பட்ட பெண் இது தொடர்பில் கண்டி சுற்றுலா பொலிஸ் பிரிவினிடம் முறைப்பாடு அளித்துள்ளார்.

இதனையடுத்து, விசாரணைகளை ஆரம்பித்த பொலிஸார் சந்தேக நபரை கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபரை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளில் கண்டி சுற்றுலா பொலிஸ் பிரிவினர் ஈடுபட்டு வருகின்றனர்.(05)




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 06.10.2024இல் வெளியிடப்பெற்றது